# மார்ச் - 28 - புதன்

பரிசுத்த வாரம்

“என் சகோதரருக்கு வேற்று மனிதனானேன். என் தாயின் பிள்ளைகளுக்கு அயலான் ஆனேன்” திபா69:8

## முதல் வாசகம் : ஏசாயா 50 : 4 – 9

நலிந்தவனை நல்வாக்கால் ஊக்குவிக்கும் அறிவை நான் பெற்றிட, ஆண்டவராகிய என் தலைவர், கற்றோனின் நாவை எனக்கு அளித்துள்ளார் காலைதோறும் அவர் என்னைத் தட்டி எழுப்புகின்றார் கற்போர் கேட்பது போல் நானும் செவிகொடுக்கச் செய்கின்றார். 5 ஆண்டவராகிய என் தலைவர் என் செவியைத் திறந்துள்ளார் நான் கிளர்ந்தெழவில்லை விலகிச் செல்லவுமில்லை. அடிப்போர்க்கு என் முதுகையும், தாடியைப் பிடுங்குவோர்க்கு என் தாடையையும் ஒப்புவித்தேன். நிந்தனை செய்வோர்க்கும் காறி உமிழ்வோர்க்கும் என் முகத்தை மறைக்கவில்லை. ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார் நான் அவமானம் அடையேன் என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன் இழிநிலையை நான் அடைவதில்லை என்றறிவேன். நான் குற்றமற்றவன் என எனக்குத் தீர்ப்பு வழங்குபவர் அருகில் உள்ளார் என்னோடு வழக்காடுபவன் எவன்? நாம் இருவரும் எதிர் எதிரே நிற்போம் என்மீது குற்றஞ்சாட்டுபவன் எவன்? அவன் என்னை நெருங்கட்டும். இதோ, ஆண்டவராகிய என் தலைவர் எனக்குத் துணைநிற்கின்றார் நான் குற்றவாளி எனத் தீர்ப்பிட யாரால் இயலும்? அவர்கள் அனைவரும் துணியைப் போல் இற்றுப்போவார்கள் புழுக்கள் அவர்களை அரித்துவிடும்.

**பதில்பாடல் :** கடவுளே உமது பேரன்பின் பெருக்கினால் எனக்குப் பதில் மொழி தாரும்

## நற்செய்தி : மத்தேயு 26 : 14 – 25

அக்காலத்தில் பன்னிருவருள் ஒருவனாகிய யூதாசு இஸ்காரியோத்து தலைமைக் குருவிடம் வந்து, ”இயேசுவை உங்களுக்கு நான் காட்டிக்கொடுத்தால் எனக்கு என்ன தருவீர்கள்?” என்று கேட்டான். அவர்களும் முப்பது வெள்ளிக் காசுகளை எண்ணி அவனுக்குக் கொடுத்தார்கள். அதுமுதல் அவன் அவரைக் காட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான். புளிப்பற்ற அப்ப விழாவின் முதல் நாளில் சீடர்கள் இயேசுவை அணுகி வந்து, ”நீர் பாஸ்கா விருந்துண்ண நாங்கள் எங்கே ஏற்பாடு செய்ய வேண்டும் என விரும்புகிறீர்?” என்று கேட்டார்கள். இயேசு அவர்களிடம், ”நீங்கள் புறப்பட்டு நகருக்குள் சென்று இன்னாரிடம் போய், ”எனது நேரம் நெருங்கி வந்து விட்டது என் சீடர்களோடு உம் வீட்டில் பாஸ்கா கொண்டாடப் போகிறேன்” எனப் போதகர் கூறுகிறார் எனச் சொல்லுங்கள் ”என்றார். இயேசு தங்களுக்குப் பணித்த படியே சீடர்கள் செயல்பட்டுப் பாஸ்கா விருந்துக்கு ஏற்பாடு செய்தார்கள். மாலை வேளையானதும் அவர் பன்னிருவரோடும் பந்தியில் அமர்ந்தார். அவர்கள் உண்டுகொண்டிருந்த பொழுது அவர், ”உங்களுள் ஒருவன் என்னைக் காட்டிக்கொடுப்பான் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்” என்றார். அப்பொழுது அவர்கள் மிகவும் வருத்தமுற்றவர்களாய், ”ஆண்டவரே, அது நானோ?” என ஒவ்வொருவரும் அவரிடம் கேட்கத் தொடங்கினார்கள். அதற்கு அவர், ”என்னுடன் பாத்திரத்தில் தொட்டு உண்பவனே என்னைக் காட்டிக் கொடுப்பான். மானிட மகன், தம்மைப் பற்றி மறைநூலில் எழுதியுள்ளபடியே போகிறார். ஆனால், ஐயோ! அவரைக் காட்டிக் கொடுக்கிறவனுக்குக் கேடு அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்” என்றார். அவரைக் காட்டிக் கொடுத்த யூதாசும் ”ரபி, நானோ?” என அவரிடம் கேட்க இயேசு, ”நீயே சொல்லிவிட்டாய்” என்றார்.

**தியானம் :** தவக்காலத்தில் பாலை நிலத்தில் உலாவந்த எமது உள்ளார்ந்த மனிதனோடு பரிசுத்த வாரத்திற்குள் நுழைந்துள்ளோம். இன்றைய நற்செய்தி வாசகங்கள் நாளை இடம்பெறும் “இரா உணவுப்பெருவிழா”வின் திருவிருந்துப் பந்தியில் அமர்வதற்கு எந்தளவில் தகுதியுடையோம் அல்லது யூதாஸ் போன்று “ஆண்டவரே அது நானா” என ஆராய்ந்து பார்க்க அழைக்கின்றது. எனினும் யூதாஸ் போன்று வாழ்பவர்களது மனித சுபாவமும் இறைமகன் இயேசுவின் தெய்வீக சுபாவமும் ஒன்றை ஒன்று எதிர்கொள்வதனையும், மனிதனுக்கும் இறைவனக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை வேறுவிதமாக சிந்திக்கவும் தூண்டுகின்றது. இறைமகன் இயேசுவோடு நெருங்கிப் பழகியும் யூதாசால் இயேசுவை இறைமகன் என உணர முடியாதிருந்தது. எனினும் தமக்கிருந்த இறை சுபாவத்தின் ஊடாக யூதாஸ் யார்? அவன் என்ன செய்யப்போகின்றான் என்பதனை இறைமகன் இயேசு அறிந்திருந்தார். தனதுவேளை நெருங்குவதனை தெரிந்திருந்தும் யூதாஸ் மீதிருந்த பரிவிரக்கத்தால் தன்னோடு ஒன்றாக பந்தியில் அமர்ந்திருந்தவனைத் துரோகி என புறம்பே தள்ளவில்லை. மாறாக சமபந்தி போசனம் செய்கின்றார். “ஒரு கன்னத்தில் அடித்தவனுக்கு மறு கன்னத்தையும் காட்டு” என்று போதித்தவர் “அம்மனிதன் பிறவாதிருந்தால் அவனுக்கு நலமாயிருந்திருக்கும்” என யூதாஸ் மீது தமக்கிருந்த இறை இரக்கததின் ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றார். கிறிஸ்தவ மதிப்பீடுகளுக்கு, விழுமியங்களுக்கு ஏற்றதாக வாழுவதனை விடுத்து மனித கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். எமது கருத்துக்களுக்கு எதிரானவர்களை “துரோகி” என மன்னிக்க மறுக்கின்றோம். வருடா வருடம் வருகின்ற தவக்காலம் எமது உள்ளார்ந்த மனிதனில் மாற்றத்தினை ஏற்பட்டுத்தியுள்ளதா? பரிசுத்த வாரத்தில் கறுப்பு உடுத்துவதால் மாத்திரம் நாம் கிறிஸ்தவர்கள் அல்ல. மாறாக, எமதுள்ளத்தில் ஏற்பட்டுள்ள இறைமகன் இயேசுவுக்கு அருவருப்பூட்டும் பாவக்கறுப்பை அகற்றி தவறான செயல்களிலிருந்து விலகுவோம். தவக்காலத்தின் மனமாற்றத்திற்கான பாவ அறிக்கை அருட்சாதனத்தைப் பெறுவோம் “ஆண்டவரே அது நானா” எனக்கேட்பதல்ல. மாறாக, திடமான நம்பிக்கையோடும் உண்மைக் கிறிஸ்தவன் என்ற விசுவாசத்தோடும் ஆண்டவர் இயேசுவின் திருவிருந்துப் பந்தியில் அமருவோம்.